# சகல அரசியல் தலைவர்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்! பொருளாதார நிலைமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் கோரிக்கை

## எதிர்ப்பவர்கள் மாற்றுவழியைக் கூறவேண்டுமெனவும் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தில் அனைத்து அரசியல் தலைவர்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டுமென்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். கண்டி மாநகர சபையின் கரலிய அரங்கம் மற்றும் கலைக்கூடம் என்பவற்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளதால் மீண்டும் கடன் பெற முடியும். எனவே, விரைவில் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்க முடியும்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய நாடுகளின் கடன்கள் தொடர்பான ஒப்பந்தங்கள் காரணமாக இந்த நிலையை எட்ட முடிந்தது. நமது நாட்டின் கடனை அடைக்கக்கூடிய குறைந்தபட்ச வருமானம் இருப்பதைக் காட்ட வேண்டும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியை 10.4 வீதமாக அதிகரிக்க வேண்டும் என்பது எங்களுக்கு கொடுக்கப்பட்ட இலக்கு.

2024 இல் அந்த இலக்கை அடைய முடியாது. இந்த இலக்கை 2025, 2026 காலப்பகுதிக்குள் அடையலாம். எனவே, நாங்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி 2024 இல் மொத்தத் தேசிய உற்பத்தியை 9.2 வீதமாக எட்டுவதை இலக்காகக் கொண்டு செயல்பட்டோம்.

வரிகளை உயர்த்தினால், எமது பெயர் பாதிப்படையும். ஆனால், பொருளாதாரத்தை காப்பாற்றினால், நமது வங்குரோத்து நிலை மறைந்துவிடும். சில நிபுணர்கள் மற்றும் அரசியல்வாதிகள் சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக கூறுகிறார்கள்.

இதை எதிர்ப்பவர்கள் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை முன்னெடுக்காவிட்டால், வேறு என்ன செய்ய முடியும் என்ற மாற்று வழியைக் கூறவேண்டும்.

இதுதான் எமது அரசியலில் உள்ள மிகப்பெரிய பலவீனம். பொறுப்பேற்கவும், கடினமான முடிவுகளை எடுக்கவும் யாரும் தயாராக இல்லை. எனவே இது தொடர்பில் அனைத்து அரசியல் தலைவர்களும் பொறுப்புடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன், என அவர் தெரிவித்துள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.



மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 31 திங்கட்கிழமை 18.12.2023 கதிர் 138

A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

# சஜித் பிரேமதாச மேற்கொண்ட வீட்டுத்திட்டங்கள் அமைச்சு ரீதியான விசாரணைகள் ஆரம்பமாம்!

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச நல்லாட்சி அரசாங்கத்தின் வீடமைப்பு அமைச்சராக இருந்த காலத்தில் அவர் மேற்கொண்ட வீட்டுத் திட்டங்கள் தொடர்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு விசாரணைகளைஆரம்பித்துள்ளது.



முறையான நடைமுறைகளை மீறி வீட்டுக் கடன்கள் போன்றவற்றை விநியோகித்ததாக

2➤

# அரசியலமைப்பை மாற்றவேண்டும்! வஜிர அபேவர்த்தன எம்.பி. தெரிவிப்பு

மாற்றமடைந்துவரும் உலக ஒழுங்கிற்கு ஏற்ற வகையில் எமது அரசியலமைப்பும் மாற்றப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் அரசியலமைப்பு, 116 தடவைகள் திருத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது. உலகுக்கு ஏற்ற வகையில்



நாமும் அரசியலமைப்பை மாற்ற வேண்டும்.

2➤

## அவுஸ்திரேலிய பாதுகாப்புப்படை புலனாய்வு பயிற்சிக்கு மட்டக்களப்பு இளைஞன் தெரிவு



(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கிராமத்தை பிறப்பிடமாகக்கொண்டு, அவுஸ்திரேலியா மெல்பேணில் வசிக்கும் ஹரி பிரதீபன், அவுஸ்திரேலியா பாதுகாப்புப் படையின் புலனாய்வு அதிகாரிக்கான பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

திரு திருமதி பிரதீபன் தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வன் ஹரி பிரதீபனுக்கு அவுஸ்திரேலியா படை பிரதானிகள் குறித்த தெரிவுக்கான விருதினை வழங்கி கௌரவித்தனர்.

# வெள்ளப் பேரிடரால் அவதியுறும் மக்களுக்கு உதவ முன்வருமாறு சிறீதரன் எம்.பி கோரிக்கை

வெள்ள அனர்த்தத்தால் பாதிப்புற்றிருக்கும் மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்கிவைக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உதவும் உள்ளங்களிடமும், தன்னார்வ அமைப்புகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களைச்சேர்ந்த மக்கள், வெள்ள அனர்த்தம் காரணமாக தமது இருப்பிடங்களிலிருந்துஇடம்பெயர்ந்து,கிளி.கண்டாவளை மகாவித்தியாலயம், கிளி.நாகேந்திரபுரம் அ.த.க. பாடசாலை, கிளி.முரசுமோட்டை அ.த.க. பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அம்மக்களை நேற்றைய தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்டதோடு, பரோபகாரியும், சமூக ஆர்வலருமான நளின் ஜரி நிறுவன உரிமையாளர் சஞ்சீவின் நிதிப்பங்களிப்பில் உலருணவுப் பொதிகளையும் வழங்கிவைத்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள 86 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கும் கண்டாவளைப் பிரதேச

2➤



# சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திரகுப்த, குற்றப் புலனாய்வுப்திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹியூமன் இம்யூனோகுளோபுலின் என்ற மருந்தை இறக்குமதி செய்தமை தொடர்பில்அவர்மீதுகுற்றம்சாட்டப்பட்டது.

இதுதொடர்பாகவாக்குமூலம்வழங்குவதற்காக சந்திரகுப்த இன்று காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்த நிலையில், அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# முட்டையின் விலை 35 ரூபாவாகக் குறைப்பு அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் லங்கா சதொச ஊடாக 35 ரூபாய் என்ற விலையில் விநியோகிக்கப்படும் என அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 10 மில்லியன் முட்டைகள் இன்று முதல் விற்பனைக்காக சந்தைக்கு விடப்பட்டுள்ளன.

கால்நடை உற்பத்தி மற்றும்

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## முட்டையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுகாதாரத் திணைக்களத்தின் அனுமதியுடன் இந்த முட்டைகள் லங்கா சதொச நிறுவனத்திற்கு இன்று முதல் விநியோகிக்கப்படுகின்றன.

இதன்படி, சதொச கடைகளின் ஊடாக மக்கள் பண்டிகைக் காலங்களில் முட்டைகளை தட்டுப்பாடு இன்றி கொள்வனவு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, மேலும் 15 மில்லியன் முட்டைகள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளதோடு, அந்த கையிருப்புக்களும் விரைவில் தரப் பரிசோதனைக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் உள்ளூர் முட்டை உற்பத்தியாளர்கள் பல சந்தர்ப்பங்களில் முட்டை விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்ததால், நுகர்வோர் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில் இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

ஆயினும், முட்டை இறக்குமதியை நிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்திருந்த நிலையில், உள்ளூர் முட்டை ஒன்றின் விலை மீண்டும் 55 முதல் 65 ரூபா வரை அதிகரித்தது. இதையடுத்து மீண்டும் முட்டையை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நுகர்வோர் அசௌகரியங்களுக்கு உள்ளாவதைத் தடுக்கும் வகையில் எதிர்காலத்தில் பல அதிகார வரம்புகளின் கீழ், இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

## வெள்ளப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலர், கிராம அலுவலர்கள், சமுர்த்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து சமைத்த உணவுகளை வழங்கிவருகின்றனர். எனினும் அந்த மக்களுக்கான பாய்கள், போர்வைகள், நுளம்பு-வலைகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் தேவைப்பாடு நிலவுகிறது.

சமநேரத்தில் பொன்னகர் மற்றும் அக்கராயன் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களும் வெள்ள அனர்த்தப் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். எனவே, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவை-யான உலருணவுகள், அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றை வழங்க முடிந்தோர் நேரடியாக அந்த மக் களுக்கு வழங்கிவைப்பது காலப்பெரும் பணியாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (02)

## சஜித் பிரதேசதாஸ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குற்றம்சாட்டி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அண்மையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் விசாரணையை ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார்.

சஜித் பிரேமதாச அமைச்சராக இருக்கும் போது 42,610 வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுத்த போதும் 38,815 வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவடையவில்லை என்று தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அவற்றை நிறைவு செய்ய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

சஜித் பிரேமதாசவின் காலத்தில் கட்டி முடிக்கப்படாத 38,815 வீடுகளுக்கு மேலதிகமாக 98,000 வீடுகள் கட்டி முடிக்கப்படாமல் இருப்பதாகவும் அதற்கு 24,000 மில்லியன் ரூபாய் தேவை என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

## அரசியலமைப்பை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிலர் 18 தடவைகள் மாற்றப்பட்டதே அதிகம் எனக்கூறுகிறார்கள். ஆனால், இது போதாது. கொரோனா காலத்திற்குப் பின்னர் உலகமே மாற்றமடைந்துவிட்டது.

ஐரோப்பிய நாடுகளில் புதிய சட்டங்கள் வந்துள்ளன. பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் தங்கள் நாட்டின் ஒட்டுமொத்த சட்டக்கட்டமைப்பையே மாற்றியுள்ளன.

இலங்கையும் உலகத்துடன் போட்டிபோட வேண்டுமெனில், நாமும் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொண்டு பயணிக்க வேண்டும், என அவர் தெரிவித்தார்.

## மத நல்லிணக்கத்தைச் சீர்குலைப்போர் குறித்து விசாரிக்க பொலிஸில் தனிப் பிரிவு

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப் படும் மதக் குற்றங்கள் மற்றும் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் சம்பவங்களை விசாரிப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பின் கீழ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குட்பட்ட தனிப் பிரிவொன்றை பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் நிறுவியுள்ளார்.

பேஸ்புக், யூடியூப் உள்ளிட்ட அனைத்து சமூக ஊடகங்களிலும் மதம் சார்ந்த தவறான செயல்கள் நடப்பது குறித்து விசாரணை நடத்தப்படுவதாகவும், இவை தொடர்பில் பொதுமக்களுக்கு புகார்களை அளிக்கும் வசதி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தொலைபேசி இலக்கம் 011-2300637, பக்ஸ் இலக்கம் 011-2381045 மற்றும் ccid.religiouspolice.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் பொதுமக் கள் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ரெதி-11)

## கொழும்பு நகரில் யாசகர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு!

அண்மையில் 65 நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளில் யாசகர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் கொழும்பு பிரதேசத்திற்கு புதிதாக 1003 யாசகர்கள் வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

குறித்த நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளுக்கு அருகில் யாசகம் புரிபவர்களின் எண்ணிக்கை 3,661 என தெரியவந்துள்ளதாக சமூக சேவைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அந்த எண்ணிக்கையில் மேல் மாகாணத்தில் மாத்திரம் 1,618 யாசகர்கள் உள்ளமையும் தெரிய-வந்துள்ளது.

கடந்த கொரோனாத் தொற்றுக்குப் பிறகு துப்பரவுபடுத்தல் வேலைகளுக்கு தொழிலாளர்களை அமர்த்தும் நிறுவனங்கள் பல மூடப்பட்டதையடுத்து அங்கு துப்பரவு தொழிலாளர்களாக பணியாற்றிய பலரும் இந்த யாசகர்களின் வரிசையில் இணைந்துள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.

மேலும், கொழும்பு வீதி சமிக்ஞைக் கம்பங்களுக்கு அருகில் யாசகம் புரிவோரில் அதிகமானோர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும் கணக்கெடுப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, யாசகர்களுக்கு புனர்வாழ்வளிக்க ஸ்தாபிக்கப்பட்டுள்ள ரிதீகம புனர்வாழ்வு நிலையம் 500 இற்கும் மேற்பட்டோரால் நிரம்பியுள்ளதாகவும் இந்த புனர்வாழ்வு நிலையம் இதுவரை தென் மாகாண சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருவதாகவும், எதிர் வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி முதல் இது மத்திய அர சாங்கத்தினால் பொறுப்பேற்கப்படவுள்ளது எனவும்சமூக சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ரெதி-10)

## திருகோணமலையில் கனமழையால் கோயில் மீது மரம் முறிந்து வீழ்ந்தது



(கஸ்பர்)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையின் காரணமாக திருகோணமலையின் இலிங்கநகர் பாலமுருகன் ஆலயப் பின்புற மதில் இன்று இடிந்து வீழ்ந்துள்ளது.

பாலமுருகன் ஆலயத்துக்கும் இதனால் சேதம் ஏற்பட்டுள்ளதாக நிருவாக சபை தெரிவித்துள்ளது.

தொடர் அடை மழை காரணமாக குறித்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது .




## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

# தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கலை அரங்கில் நடந்த திருவாசக மாநாடு







(வி.ரி. சகாதேவராஜா, நூருல்ஹூதா உமர்)

அம்பாறை மாவட்ட இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் எற்பாட்டில் தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கலை அரங்கில் கடந்த மூன்று தினங்களாக சிறப்பாக நடைபெற்றது.

திருவாசக மாநாட்டின் 3 ஆம் நாள் நிகழ்வுகள் தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கண்ணகி கலையரங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகி, தவத்திரு சிவாக்கர தேசிய சுவாமியின் அருளுரை, மாநாட்டின் திருவாசக நூல் வெளியீடு என்பவற்றுடன் இவ்வாண்டுக்கான திருவாசக மாநாடு இனிதே நிறைவடைந்தது.

நிகழ்வில்பங்கேற்பதற்காகஇந்தியாவில் இருந்துசூரியநார்கோவில்ஆதீனதவத்திரு சிவாக்கர தேசிய சுவாமிகள் வருகை தந்திருந்தார். அவரது வருகையை ஒட்டி இந்து ஸ்வயம் சேவக சங்கமும் ஆலயங்களும் மற்றும் இந்து சமய அமைப்புக்களும் இணைந்து நடாத்தியிருந்தன.

இந்தியா சூரியநார் கோவில் ஆதின தவத்திரு சிவாக்கர தேசிய சுவாமிகள் மற்றும் இகிமி சுவாமிகள் திருவாசகம் தொடர்பான சிறப்பு சொற்பொழிவினை ஆற்றினார்கள். இறுதி நாள் நிகழ்வில் கொழும்பு இராம கிருஷ்ண மின் தலைவர் ஸ்ரீமத் அட்சராத் மானந்தா ஜீ, மட்டக்களப்பு இராம கிருஷ்ண மின் தலைவர் ஸ்ரீமத் சுவாமிநிலமாதவானந்தாஜீ, ஆன்மிகஅதிதியாகசிவஸ்ரீ. நீ. அங்குசநாத குக்கள்,மேலும் திரு. அரவிந்திரன் ஜீ, (கிழக்கு மாகாண இந்து ஸ்வயம்சேவக சங்க தலைவர்), அம்பாறை மாவட்ட இந்து ஸ்வயம் சேவக சங்க பொறுப்பாளர் திரு. இரா. குணசிங்கம்,அக்கறைப்பற்றுவிபுலானந்தா சிறுவர் இல்லத்தின் பணிப்பாளர் இறை பணிச் செம்மல் த. கைலாயபிள்ளை, திருக்கோவில் பிரதேச கலாசார உத்தியோகத்தர் தேவராஜ் நிசாந்தி, இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் அம்பாரை மாவட்ட இணைப்பாளர்கள், ஆலயங்களின் தலைவர் அதன் உறுப்பினர்களும், பொது அமைப்புங்களும், சிவதொண்டர் அமைப்பின் உறுப்பினர்கள், அம்பாரை மாவட்ட பிரதேச ஒதுவார்களும், பொதுமக்கள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கலாபூணம் திரு. தம்பிமுத்து மகேந்திரா அவர்களின் தலைமையில் திருவாசகம் ஓதுதலும்பொருள்கூறலும்என்றதலைப்பில் காலை 8.00 மணிமுதல் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்றிருந்தன

## மலேசியா சர்வதேச மனக்கணிதப் போட்டி வெற்றிபெற்ற மாணவனுக்கு யாழில் பாராட்டு

*மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச மனக்கணிதப் போட்டியில், சி பிரிவில் சம்பியனாகத் தெரிவான யாழ்ப்பாணத்தை சேர்ந்த விக்னேஸ்வரன்ருஷாந்தன்எனும் மாணவனையும் போட்டியில் வெற்றி பெற்ற ஏனைய மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.*

*யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்தில், மாணவர்களைப் போட்டிக்கு தயார் செய்த UCMAS Jaffna Town Center இன் தலைவர் திருமதி தயானா சந்துரு தலைமையில் இந்த கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.*

*நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கோசலை மதனும் சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி காயத்திரி கோகுலனும் கலந்து கொண்டு போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கான கேடயங்கள் மற்றும் பரிசுகளை வழங்கி வைத்தனர்.*

*போட்டியில் சம்பியன் வென்ற மாணவனுக்கான கேடயத்தை பிரதம விருந்தினரான கோசலை மதன் வழங்கி வைக்க , 50 ஆயிரம் ரூபாய் பணப் பரிசினை சட்டத்தரணி காயத்திரி கோகுலன் மற்றும் தயானா சந்துரு ஆகியோர் வழங்கி வைத்தனர்.*








# வடகிழக்கு அவுஸ்திரேலியாவில் மழை – வெள்ளம் சிக்கி தத்தளித்தவர்களில் 300 பேர் மீட்கப்பட்டனர்

அவுஸ்திரேலியாவின் வடகிழக்குப் பகுதியில் நேரிட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கிய 300க்கும் மேற்பட்டோர் இரவிரவாக மீட்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் வெள்ளத்தில் சிக்காமல் இருப்பதற்காகக் கட்டடங்களின் மேற்கூரைகளில் ஏறித் தப்பியுள்ளனர்.

வெள்ளப் பெருக்குக் காரணமாக கெய்ர்ன்ஸ் விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. சுமார் 1.60 லட்சம் பேர் வசிக்கும் இந்த நகரில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து உள்ளதாகக் கூறப்படுகிறது.

கெய்ர்ன்ஸ் நகரில் மழை குறைந்தபோதிலும் அருகிலுள்ள போர்ட் டக்ளஸ், டெயின்ட்ரீ, குக்டவுன், ஹோப் வேலி போன்ற பகுதிகளுக்கு மழை வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரவு மிகவும் மோசமானதாக, சவாலுக்குரியதாக இருந்தது. சுமார் 300 க்கும் மேற்பட்டோரை மீட்டோம், என்று குயின்ஸ்லாந்து காவல் ஆணையர் காதரினா கரோல் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பகுதிகளை இரு புயல்கள் கடந்துசென்றபோதிலும் பலத்த காற்று காரணமாக லேசான பாதிப்புகளே நேரிட்டன. எனினும், பலத்த மழை வெள்ளத்தால் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

சாலைகள், ரயில் பாதைகள் துண்டிக்கப்பட்டன. பல குடியிருப்புப் பகுதிகள் தொடர்பு இழந்தன. 14 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள், வணிக நிறுவனங்களுக்கு மின்சாரம் தடைப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (04)

# உடனடியாக நீண்ட காலப் போர் நிறுத்தம்

## இஸ்ரேலுக்கு பிரான்ஸ் வலியுறுத்தியுள்ளது



காஸா பகுதியில் தாக்குதல்களை நிறுத்த இஸ்ரேலுக்கும் முற்றிலும் விருப்பமில்லாத நிலையில், உடனடியாக நீண்ட காலப் போர் நிறுத்தத்தை தொடர பிரான்ஸ் வலியுறுத்தியுள்ளது. அதிக அளவில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதாக பிரான்ஸ் வருத்தம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் வெளியுறவுத் துறை அமைச்சர் கத்தரின் கொலோனா, காஸாவில் தொடர்ந்து வரும் தாக்குதல் குறித்த பிரான்ஸின் கவலையை இஸ்ரேலிடம் தெரிவித்துள்ளார்.

மேலும், ராஃபாவில் குடியிருப்புக் கட்டிடம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கான காரணத்தையும் அவர் கேட்டறிந்துள்ளார். இஸ்ரேலின் ராஃபா தாக்குதலில் பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

விரையில் இஸ்ரேல் அதிகாரிகள் இந்தத் தாக்குதல்களை நிறுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் தாக்குதலால் இதுவரை 18,800 க்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில் சர்வதேசநாடுகள் இஸ்ரேலின் இந்த நடவடிக்கையைக் கண்டித்து வருகின்றன. இஸ்ரேல் உலக நாடுகளின் ஆதரவை இழக்க ஆரம்பித்திருப்பதாக அமெரிக்கா கடந்த வாரம் எச்சரித்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர் டெல் அவிவில் இஸ்ரேல் அதிகாரிகளைச் சந்தித்து போர்க்காலத்தை வரையறுக்க வலியுறுத்தப் போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# இஸ்ரேலின் தாக்குதலில் மேலுமொரு பாலஸ்தீன ஊடகவியலாளர் மரணம்



இஸ்ரேல் நடத்திவரும் கடும் தாக்குதலில் மேலுமொரு பாலஸ்தீன ஊடகவியலாளர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது வீட்டின் மேல் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் ஊடகவியலாளர் ஹனீன் அல் கஸ்தானும் அவரது குடும்பத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

போர் துவங்கியதிலிருந்து இதுவரை 95 ஊடகவியலாளர்களை இஸ்ரேல் கொன்றுள்ளதாக தகவல்கள் பாலஸ்தீனத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாலஸ்தீனத்தில் நடக்கும் கொடுமைகளை முடக்கும் நோக்கில் உண்மைகளை உலகுக்குத் தெரியவிடாமல் தடுக்க, இஸ்ரேல் பத்திரிகையாளர்களைத் திட்டமிட்டுக் கொல்வதாக செய்தி நிறுவனங்கள் குற்றம் சாட்டி வருகின்றன.

ஹமாஸ் அமைப்பின் ஒக்டோபர் 7 தாக்குதலுக்குப் பதிலளிக்கும் நோக்கில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல், இதுவரை மொத்தம் 18,800 க்கும் அதிகமான மக்களைக் கொன்றுள்ளதாகவும், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், மருத்துவமனைகளைத் தரைமட்டமாக்கியுள்ளதெனவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

ஹமாஸ் அமைப்பு ஒளிந்திருப்பதாகக் காரணம் கூறி பொதுமக்கள் தங்கும் இடங்களிலும் முகாம்களிலும் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இஸ்ரேலின் தாக்குதலுக்கு, காஸாவில் உள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகளும் பலியாகின்றனர் என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ள நிலையில், சண்டையின் போது தவறுதலாக சொந்த நாட்டுப் பிணைக் கைதிகளையும் இஸ்ரேல் கொன்றுள்ளதாக செய்திகள் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

# அகதிகள் சென்ற படகு லிபியாவுக்கு அருகே கவிழ்ந்தது 61 போ உயிரிழந்ததாக ஐ.நா. அகதிகள் அமைப்பு தகவல்

ஐரோப்பிய நாடுகளுக்கு அடைக்கலம் தேடி, அகதிகள் சென்ற படகு லிபியா கடற்கரைக்கு அருகே சனிக்கிழமையன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவத்தில் பெண்கள், குழந்தைகள் உள்பட 61 போ உயிரிழந்ததாக ஐ.நா.வின் சாவதேச அகதிகள் அமைப்பு தெரிவித்துள்ளது



இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், அகதிகள் 86 போ சென்ற படகு லிபியாவின் மேற்கு கடற்கரையில் உள்ள ஸுவாரா நகரத்துக்கு அருகே வந்தபோது, கடலுக்குள் கவிழ்ந்தது. இந்த விபத்தில் 61 போ உயிரிழந்தனா, எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலில் சிக்கியுள்ள அகதிகள் குறித்து தகவல் தெரிவித்து வரும் தன்னார்வ அமைப்பான 'அலார்ம் போன்', எக்ஸ் சமூகவலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'சில அகதிகள் எங்களுடயை தன்னார்வாகளிடம் வந்து சோந்தனா. இச்சம்பவம் தொடாபாக லிபியாவின் கடலோரக் காவல் படை உள்ளிட்ட அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்தோம். அகதிகளை மீட்கும் பணியில் ஈடுபடப் போவதில்லை என அவாகள் பதிலளித்தனா' எனத் தெரிவித்துள்ளது.

ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் நிலவி வரும் போர், வறுமைச்சூழல் காரணமாக, ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பாவுக்கு அடைக்கலம் தேடி கடல் வழியாகப் பயணம் மேற்கொள்கின்றனா.

இதில் முக்கியப்பாதையும் அதேவேளையில் ஆபத்து நிறைந்ததுமான மத்தியதரைக் கடல் பகுதியில் படகுகள் கவிழும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இந்தக் கடல் மார்க்கத்தில் இவ்வாண்டில் 2,250 க்கும் மேற்பட்டோா உயிரிழந்ததாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனா. (04)

# மாத்தறையில் சர்வதேச மாஸ்டர் மெய்வல்லுநர் போட்டிகளில் புத்தளம் சகோதரர்களுக்கு தங்கம்

(ரஸீன் ரஸ்மின்)

மாத்தறையில் இடம்பெற்ற இவ்வருடத்திற்கான சர்வதேச மாஸ்டர் மெய்வல்லுநர் திறந்த போட்டிகளில் புத்தளம் நகரைச்சேர்ந்த உடன்பிறந்தசகோதரர்கள் இருவர் இரண்டுதங்கப்பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்று புத்தளத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இந்தப் போட்டிகள் மாத்தறை - கொடவில்ல விளையாட்டு மைதானத்தில் 16 ஆம் திகதி நடைபெற்றன.

இதன்போதே குறித்த சகோதர்கள் இருவரும் பதக்கங்களை பெற்றுக் கொண்டனர். இதன் அடிப்படையில் உடற்கல்வி ஆசிரியர்களான எம்.எப்.எம் ஹூமா யூன் உயரம் பாய்தல் போட்டியில் தங்கப்பதக்கத்தையும், எம்.எப்.எம் துபையில் நீளம் பாய்தல் போட்டியில் தங்கப்பதக்கத்தையும், 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர்.

குறித்த சாதனை வீரர்கள் இருவரும் கற்பிட்டி கோட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அல்-அக்ஷா தேசிய பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியர்களாக கடமையாற்றி வருவதுடன், புத்தளம் பாத்திமா பெண்கள் கல்லூரிக்கும் இணைப்பு செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, இந்த வருடம் செப்டம்பர் மாதம் மலேசியா கோலாலம்பூரில் நடைபெற்ற 35 வது சர்வதேச மெய்வல்லுனர் போட்டியில் பங்குபற்றிய உடற்கல்வி ஆசிரியர்களான குறித்த சகோதரர்கள் இருவரும் தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களை பெற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உயரம் பாய்தலில் எம்.எப்.எம்.ஹூமாயூன் தங்கப் பதக்கமும், 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் எம்.எப்.எம்.துபைல் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றனர்.

தேசிய மட்டம் மற்றும் சர்வதேச மட்டத்தில் விருதுகளை பெற்ற, பயிற்சிவிப்பாளர் அங்கீகாரம் பெற்ற மேற்படி இரண்டு ஆசிரியர்களின் முயற்சியில் புத்தளத்தில் முதற்தடவையாக மெய்வல்லுனர்களுக்கான பயிற்சிக்கூடம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டம் மற்றும் சர்வதேச மட்டத்திலான போட்டிகளுக்கு புத்தளத்தில் இருந்து வீரர்களை தயார் செய்து, அவர்களை சாதனையாளர்களாக உருவாக்கவேண்டும் என்றநோக்கிலேயே குறித்த மெய்வல்லுனர்களுக்கான பயிற்சிக்கூடத்தை ஆரம்பித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.





# தாயிப் நகர் முஸ்லிம் வித்தியாலய கட்டிட திறப்பு, கல் நாட்டு விழா

(கே.எ.ஹமீட்)

தி.கிண்.தாயிப் நகர் முஸ்லிம் வித்தியாலயத்தின் முஸ்லிம் ஹாண்ட்ஸ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடத் திறப்பு விழாவும் பல்தேவைக் கட்டிடத்திற்கான கல் நாட்டு விழாவும் பாடசாலை அதிபர் அவர்களின் தலைமையில் வெகுசிறப்பாக பாடசாலை முன்றலில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ன. இவ்விழாவில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் கலந்துகொண்டு கட்டிடத்தினை திறந்துவைத்தார்.

கௌரவ அதிதிகளாக கிண்ணியா நகரசபையின் முன்னாள் நகரபிதா நிவாஸ் மற்றும் முஸ்லிம் ஹாண்ட்ஸ் நிறுவனத்தின் திட்டப் பண்ணிப்பாளர் இல்முதீன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

விசேட அதிதியாக முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் ஆசிரியர் எம். வை. இமாம்தீன் , தம்பலகாமம் உதவிப் பிரதேச செயலாளர், தம்பலகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கோட்டக்கல்வி அதிகாரி, உலமாக்கள், பாடசாலை அதிபர்கள், கிராம அபிவிருத்தி சங்கம், விளையாட்டு கழகங்கள், பள்ளிவாயல் நிர்வாகம், மற்றும் ஊர் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலையில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள்





(ஹஸ்பர்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழுங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

பெண்கள் மற்றும் மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுபடுத்தல் அமைச்சின் மகளிர் பணியகத்தினால் 10 பெண்தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக தலா ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் பொ.தனேஸ்வரன் தலைமையின் கீழ் வழுங்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் பிரதேச செயலாளர் பொ.தனேஸ்வரன், உதவி பிரதேச செயலாளர் யு.கும ணன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.றியாத், நிருவாக உத்தியோகத்தர் ஜெயந்தி டெரிக், சமுர்த்தி முகாமையாளர் எஸ்.சிவகுமார், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் யு. சாய்சாதனி ,கிராம அதிகாரி என்.ஜெயகாந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# சிகரம் தொட்ட சிறுசுகள் பாராட்டி கௌரவிப்பு





(எம்.எப்.நவாஸ்)

ஏறாவூர் அல்முனீறா பாலிகா மகா வித்தியாலயத்திலிருந்து இவ்வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்டைசக்குத் தோற்றி வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப்பெற்ற15 மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் என்.எம். மகாத் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு அதிதிகளாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் நிர்வாகத்திற்குப் பொறுப்பான பிரதிக்கல்விப்பணிப்பாளர்எம்.ஜே.எப.றிப்கா, ஏ.எம்.முபாஸ்தீன், எம்.ஐ. அஹ்றாப், எஸ்.எம். ரின்சாத், சமூக நலன் அபிவிருத்தி ஒன்றியத்தின் பொருளாலர் அ.ற.வஸீம்அக்ரம். ஆகியோரும்கலந்து கொண்டனர்.



# பெரியநீலாவணை பொலிஸ் வளாகத்தில் ஆண்டிறுதிக்கான பொலிஸ் பரிசோதனை

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

பெரியநீலாவணை மற்றும் சாய்ந்த மருது பொலிஸ் நிலையங்களின் பொலிஸ்பரிசோதனைபெரியநீலாவணை பொலிஸ்நிலைய வளாகத்தில் 16 ஆம் திகதி நடை பெற்றது.

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெ.எச்.எம்.என்.ஜெயபத்ம பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் அணிவகுப்புக்களை பார்வையிட்டார்.

இதன் போது, பொலிஸ் நிலையம், பொலிஸாரால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவை நிலையங்கள், சுற்றுச்சூழல்போன்றவற்றையும்பொலிஸ் அத்தியட்சகர் பார்வையிட்டதுடன், பொலி-ஸாரால்பயன்படுத்தப்படும்வாகனங்களும், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.எஸ்.கே.வீரசிங்க, சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ஐ.சம்சுத்தீன் உட்பட பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# புத்தளம் கல்வி வலய இடமாற்ற மேன்முறையீட்டு பரிசீலனை

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் கல்வி வலயத்தில் ஒரே பாடசாலையில் 8 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள இடமாற்றங்கள் தொடர்பில் மேன்முறையீடுகளை சமர்ப்பித்த ஆசிரியர்களின் மேன்முறையீட்டு மனுக்கள் பரிசீலனை நாளை (19) செவ்வாய்க்கிழமை மாகாண கல்வி திணைக்கள அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் புத்தளம் வலய கல்விப் பணிமனையில் இரு கட்டங்களாக இடம்பெற உள்ளது. இதன்படி காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரை புத்தளம் தெற்கு, புத்தளம் வடக்கு மற்றும் கற்பிட்டி கோட்டங்களில் உள்ள ஆசிரியர்களுக்கும்

பி.பகல் 1.30 மணி முதல் 3 மணி வரை ஆனமடுவ மற்றும் பள்ளம கோட்டங்களில் உள்ள ஆசியர்களுக்கும் நடைபெற உள்ளதாக புத்தளம் வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.






## சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.எம்.எம்.ஏ.காதர் காலமானார்



(அஸ்லம் மௌலானா)

கிழக்கின் சிரேஷ்ட ஊடகவி-யலாளரும் இலக்கியவாதியுமான கலாபூசணம் பி.எம்.எம்.ஏ.காதர், தனது 66 ஆவது வயதில் திங் கட்கிழமை (17) காலமானார்.

மருதமுனையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கடந்த 3 தசாப்த காலமாக அனைத்து தேசிய பத்தி ரிகைகளினதும் பிராந்திய செய்தி யாளராக மிகவும் சிறப்பாக பணி யாற்றி வந்துள்ளார்.

சிறு வயது முதல் கவிதை, கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம் கொண்டிருந்த இவர் தினசரி மற்றும் வார இதழ்களில் செய்தி அறிக்கையிடலுக்கு மேலதி கமாக பிராந்திய மற்றும் சமூக முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு ஏராளமானமான விவ ரணக் கட்டுரைகளையும் விமர் சனங்களையும் எழுதி வந்துள்ளார்.

இலங்கைபத்திரிகைஸ்தாபனமும் பத்திரிகை ஆசிரியர் சங்கமும் வருடாந்தம் நடாத்தும் ஊடக விருது விழாவின் 2010 ஆம் ஆண்டுக்கான போட்டியில் சிறந்த கட்டுரையா ளருக்கான சுப்ரமணிய செட்டியார் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அவ்வாறே 2012ஆம் ஆண்டு இங்கை பத்திரிகை ஸ்தாபனமும், இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து நடாத்திய போட்டியில் சிறந்த சூழலியல் செய்தி யாளருக்கான விருதுதை வென்றார்.

2018 ஆண்டு கலாசார, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தி னால் கலாபூசணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இவர் அதே வருடம் கிழக்கு மாகாண சபையின் உயர் விருதான வித்தகர் விருதையும் பெற்றிருந்தார்.

## ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புனரமைப்புக்கான கூட்டம்

(கே.எ.ஹமீட்)

நிந்தவூர் பிரதேசத்தில் அமைந்துள்ள 25 கிராம சேவகர் பிரிவுகளுக்கான ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள், இளைஞர் கிளைகள், மகளிர் கிளைகள் புனரமைப்பு தொடர்பான விசேட கூட்டம் அம்பாறை மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரும், ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொருளாலரு மான பைசல் காசீம் தலைமையில் நேற்று நிந்தவூரில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், முன்னாள் வட-கிழக்கு மாகாண சபை உறுப் பினருமான. ஏ.எல்.அப்துல் மஜீத், பிரதிசெயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சரு மான எம்.எஸ்.உதுமாலெப்பை, மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சி.சமால்டின், அரசியல் அதிஉயர்பீட உறுப்பினர் எம்.டி.சப்றாஸ், முன்னாள் நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்கள், மத் திய குழு உறுப்பினர்கள், மற்றும் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.12.2023இல் வெளியிடப்பெற்றது.